# ஈழத்து இந்துசமய வளர்ச்சியில் இந்துப் பத்திரிகைகளினதும், சஞ்சிகைகளினதும் வகிபங்கு.

இளஞ்சைவப்புலவர்.திரு.ஜீ.பால்ராஜ் B.A.(Hons)

தற்காலிக விரிவுரையாளர்

இந்துநாகரிகத்துறை

கலைகலாசார பீடம்

கிழக்குப்பல்கலைக்கழகம்,இலங்கை

jevakumarpalraj@gmail.com

**Research Abstract:**

Hinduism an old religion which has been spread all over the island passing a lot of difficulties. Hinduism was came from India which is practiced by most of the Tamil people in Srilanka. During the Christianity was forcely spread by the British colonialist in Tamil area. In this period Hinduism mostly affected by the Christianity which was reformed by Tamil great personalities like aarumuganavalar. Apart from these personalities my research tend to know about are there any writers who contributed to the Hinduism reform. This research is being done through historical, comparative and explanation research method.

**Key words**: Srilanka, Hinduism, Hindu newspaper, Hindu magazine

அறிமுகம்:

இந்துசமயமானது தான் தோன்றிய தாய்நிலத்தில் மட்டுமல்லாது அது பரவி நின்ற ஈழத்திலும் கூட பல இன்னல்களைச் சந்தித்து அதிலிருந்து மீண்டு வளர்ந்து வந்துள்ள ஒரு தொன்மைச்சமயமாக விளங்குகிறது. குறிப்பாக 18,19 ஆம் நூற்றாண்டுகளில் பிரித்தானியர் ஆட்சியின் போது ஈழத்தில் தமிழர் தம் பிரதேசங்களில் கிறிஸ்தவ மதம் வலிந்து பரப்பப்பட்டது. இதனால் இந்துசமயத்தை கிறிஸ்தவ சமயம் எனும் இருள் மேகம் முழுமையாக மூடிக்கொண்டது. இத்தகைய சூழலில்தான் ஆறுமுகநாவலர் போன்றோர் தோன்றி சமயப்பணிகளையும், பிரச்சாரப்பணிகளையும் மேற்கொண்டு இருளால் சூழ்ந்து கிடந்த இந்துசமயத்திற்கு ஒளி கொடுத்தார்கள்.

இத்தோடுதான் இந்துப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பனவற்றின் தோற்றம், வளர்ச்சி ஆரம்பமாகின்றது. அதாவது கிறிஸ்தவ மதத்திற்கு எதிரான கண்டனங்களை வெளியிடவும், சமயக்கருத்துக்களை மக்களிடையே பரப்புரை செய்து இந்துசமயத்தின் உண்மை நிலையை எடுத்துக்காட்டவும், கிறிஸ்தவ மதத்தின் பார்வையில் இருந்து

இந்துசமயத்தை விடுதலை பெறச் செய்யவும் இந்துசமயம்சார் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன தோற்றம் பெற்றன.

ஆரம்பத்தில் துண்டுப்பிரசுரம் மூலம் சமயக்கருத்துக்களை பரப்புரை செய்தார்கள். இது எல்லா மக்களையும் போய்ச்சென்றடையவில்லை என்பதால் அனைத்து மக்களிடமும் சமயக்கருத்துக்களை பரப்பவல்ல ஒரே ஊடகம் இதழியல்சார் துறை என்று கருதி இந்துசமயம் சார் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் தோற்றுவித்தார்கள். இதற்கு 1849இல் ''வித்தியானு பாலன'' என்ற பெயரில் ஆறுமுகநாவலரால் நிறுவப்பட்ட அச்சியந்திர சாலை பெரிதும் துணை புரிந்தது.

அந்த அச்சியந்திர சாலையைப் பயன்படுத்தி நாவலர் கண்டனப்பிரசுரங்கள், நூல்கள் பத்திரிகைகள் போன்றவற்றையும் பிரசுரித்தார். இதனை பேராசிரியர் சி.வை. தாமோதரம் பிள்ளை ''நல்லை நகர் நாவலர் பிறந்திலரேற் சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே……'' என்று பாடுவதன் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

எனவே இக்காரணங்களால் இக்காலகட்டத்தில் இந்துப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் தோற்றம் பெற்றன. பொதுவாக இந்து ஊடகத்துறை என்பது இக்காலகட்டத்தில் இந்துப்பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையுமே குறித்து நின்றது.

ஈழத்தில் எழுந்த இந்துசமயம் தொடர்பான பத்திரிகைகளில் முதலாவதாக தோன்றிய பத்திரிகை இலங்கை நேசன் எனும் பத்திரிகையாகும். 1877 ஆம் ஆண்டு சின்னத்தம்பி என்பவரால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. ஈழத்ததிலெழுந்த முதலாவது தமிழ்ப் பத்திரிகை உதய தாரகையாகும். இப்பத்திரிகையானது இந்துசமயத்திற்கெதிராக பல கருத்துக்களை வெளியிட்ட வேளையில் அக்கருத்துக்களை மறுதலித்து இந்துசமய உண்மைகளை பரப்பும் முகமாக இலங்கை நேசன் செயற்பட்டது. இதனால்தான் இக்காலம் ''பத்திரிகை போர்க்காலம்'' என வர்ணிக்கப்படுகிறது.

இந்துசமயக்கருத்துக்களை பரப்புரை செய்வதற்குரிய சிறந்த கருவியாக ஆறுமுகநாவலர் இப்பத்திரிகையினைப் பயன்படுத்தி பல கட்டுரைகளை வெளியிட்டார். அதில் ''இது நல்ல சமயம்'' எனும் கட்டுரை சிறப்பானது என்பர். இலங்கை நேசனூடாக சைமன் கதிரவேற்பிள்ளையுடன் நடாத்திய சமயத்தர்க்கங்கள் இந்துஊடக விழிப்புணர்வுக்கு வழிகாட்டின என இ.சிவகுருநாதன் அவர்கள் குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது.

அடுத்து நிறைவான சமயக்கருத்துக்களை தாங்கி 1880 இல் வெளிவந்த இந்துசமயம்சார் பத்திரிகை ''சைவ உதயபானு'' எனும் பத்திரிகையாகும். இதன் ஆசிரியர் ஊரெழு சரவணமுத்துப்பிள்ளை ஆவார். 'சைவ சித்தாந்த விளக்கம்', 'நான் ஒரு சைவனா?', சைவ மாணவன்', 'சமயம் சமயி சமயா சமயம்' போன்ற தலைப்பிலமைந்த பல சைவக்கட்டுரைகள் இப்பத்திரிகையில் வெளிவந்தன. அத்துடன் சைவவப்பிள்ளைகள் சைவச்சூழலில் கல்வி கற்கவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியதுடன் சைவப்பாடசாலைகளின் உருவாக்கத்திற்கும் இப்பத்திரிகை முன்னின்று உழைத்துள்ளது.

அடுத்து இப்பத்திரிகையைப் பின்பற்றி 1881 இல் உடுவில் வைத்திஸ்வர ஐயர் என்பவரால் ‘‘சைவபோதினி’’ எனும் பத்திரிகை வெளியிடப்பட்டது. பொருளாதாரப்பிரச்சினைகள் காரணமாக இப்பத்திரிகையால் மேற்கொண்டு பயணிக்க முடியவில்லை. இருப்பினும் சைவ உதயபானுவைப் போன்று நீண்ட சமய விழிப்புணர்வை ஏற்படுத்த வில்லையாயினும் அதன் குறுகிய ஆயட்காலத்திற்குள் ஓரளவு சைவசமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இந்துசமய வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து ஈழத்தில் இந்துசமயம் சார்பாக 1882இல் வெளிவந்த மற்றுமொரு பத்திரிகை ‘விஞ்ஞான வர்த்தினி’ ஆகும். இப்பத்திரிகையில் சமய வழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பல கட்டுரைகள் வெளிவந்தன. இப்பத்திரிகையானது சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு வருகை தந்தபோது உதயதாரகையால் வெளியிடப்பட்ட சித்தாந்த,வேதாந்த முரண்பாடுகள் பற்றிய சர்ச்சைகளிற்கு மறுப்புத் தெரிவிப்பதற்கான களத்தினை அமைத்துக் கொடுத்தது. 1883ஆம் ஆண்டு வல்வை.பொ.ஞானசபாபதிப்பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்ட ‘சைவஅபிமானி’ பத்திரிகையும் சமயம்சார்ந்த வெகுஜனப்பத்திரிகையாக தன்னை இந்துசமய வளர்ச்சிப்பாதையில் அர்ப்பணித்தது.

அடுத்து யாழ்.சைவபரிபாலன சபையால் 1889ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ‘இந்துசாதனம்’ எனும் தமிழ் பத்திரிகையும், ‘THE HINDDU ORGAN’ எனும் ஆங்கிலப்பத்திரிகையும் ஈழத்து இந்துசமய வளர்ச்சியில் முன்னின்று உழைத்த பத்திரிகைகளாகும். இந்துசமயம் சார்ந்த ஆங்கில,தமிழ் பத்திரிகையாக இது அமைந்ததனால் பலர் இப்பத்திரிகை மீது விருப்புக் கொண்டனர்.

அந்த வகையில் இந்துக்களின் அரசியல்,சமூக,பொருளாதார,கல்வி மறுமலர்ச்சிக்கான சிந்தனை நாற்று மேடையாகவே இந்துசாதனம் தொழிற்பட்டது. அறிஞர் பே.சு.மணி அவர்கள் இந்துசாதனம் இந்துப்பணபாட்டு மறுமலர்ச்சியின் குரலாகவே ஒலித்தது எனக்கூறியிருப்பது உளடகத்துறையில் அதன் வளர்ச்சியையும் இந்துசமய மறுமலர்ச்சிக்கு அது ஆற்றிய பணிகளையும் காட்டுகிறது.

பல சைவம்சார் விடயங்களை மக்களிடத்தில் இந்துசாதனம் கொண்டு சேர்த்தது. ஆலய நிருவாக ஒழுங்கு,திருக்கோயில் செல்லும் முறை, ஆலயவழிபாடு, சைவசித்தாந்த சிந்தனைகள், இந்துக்கல்வி, விரதங்கள்,விழாக்கள், தியானம்,தீட்சை,கரியை,திருமுறையின் சிறப்பு,இறைவழிபாடு போன்றவற்றை தலையங்கங்களாகத் தாங்கி இப்பத்திரிகை வெளிவந்தது. குறிப்பாக ‘முருகப்பெருமான் வணக்கம்’ என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் முருக வழிபாட்டின் தொன்மையும்,ஈழத்து முருக ஆலயங்கள் பற்றியும் சிறப்பாக விளக்கியுள்ளது.

இந்துசாதனம் சைவசமய வளர்ச்சியில் பல பங்களிப்பினைச் செய்துள்ளது. குறிப்பாக சுவாமி விவேகானந்தரது இந்துசமய மறுமலர்ச்சி குறித்த தகவல்களை இந்த பத்திரிகை

மக்களிடம் கொண்டு சென்றது. சுவாமி அவர்கள் அமெரிக்காவில் இந்துசமயம் பற்றி ஆற்றிய உரைகளையும், ஈழத்துக்கு வருகை தந்ததனால் இந்துசமயத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சியை பற்றிய கட்டுரைகளையும் மக்களிடத்தில் கொண்டு சேர்த்தது.

இந்துப்பெண்கள் தொடர்பாகவும்,அவர்களின் கல்வி வளர்ச்சி தொடர்பாகவும் கருத்துக்களை வெளியிட்டது. 'சமயப்பணி ஆற்றிய சைவமங்கையர்' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை ஒன்றில் "உமையொரு பாகன் என்ற பொழுதே சைவஉலகில் பெண்ணும்,ஆணும் சமத்துவ உரிமை பூண்டுள்ளோர் என்பது அமையும் முற்காலத்தில் சைவமங்கையர் எவ்வளவு பேர்......" என்று கூறப்பட்டுள்ளதானது சைவமங்கையர் பற்றியும்,அவர்களின் சமத்துவத்தையும் புலப்படுத்துகிறது.

இந்து ஆலயங்கள் பற்றியும் பல சிறப்புக் கட்டுரைகள் வெளிவந்தன. அந்தவகையில் திருக்கோணேஸ்வரம்,திருக்கேதிஸ்வரம் ஆலயங்கள் பற்றிய செய்திகளையும் வெளியிட்டது. 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் விளைவாக தோற்றம் பெற்ற இந்துசாதனம் சமய-சமூகக் கருத்துக்களை சிறப்பாக மக்களிடம் முன்வைத்து இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சியை இன்னும் மெருகூட்டியது. ஊடகத்துறையில் பல சமயக்கட்டுரைகளை தாங்கி வெளிவந்து வளர்ச்சி கண்டது என்பது மறுப்பதிற்கில்லை.

இவை தவிர 1900 ஆம் ஆண்டு வெளிவந்த திராவிடக்கோகிலம் என்ற பத்திரிகையும், 1901ஆம் ஆண்டு வெளிவந்த சத்தியவேத பாதுகாவலன் என்ற பத்திரிகையும் சைவம் சார்ந்த பத்திரிகைகளாகும். இந்துசமயம்சார் விடயங்களை தாங்கி வெளிவந்ததனால் இந்துசமய வளர்ச்சியில் இப்பத்திரிகைகளும் உதவின என்பர். 1907இல் வெளிவந்த ஆத்மபோதினி என்ற பத்திரிகை பொதுச்செய்திகளுடன் சைவசமயம் சார்ந்த செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தது. 1908இல் வெளிவந்த சைவசூக்குமார்த்த போதினி சமய தத்துவங்களை அதிகம் வெளிப்படுத்தியது. ஞானசித்தி என்ற பத்திரிகை இந்துசமய வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து கருத்துக்களை வெளியிட்டு வளர்ச்சி கண்டது.

1911இல் வெளிவந்த சண்முகநாதன்,மகாவிஜயலட்சுமி எனும் பத்திரிகைகள் சைவ அபிவிருத்தியில் கவனம் செலுத்திய முக்கிய பத்திரிகைகளாகும். மற்றும் கலியுகவரதன்,விசுவகாமன் போன்ற பத்திரிகைகள் சமயமுன்னேற்றம் மற்றும் சமயதத்துவக் கருத்துக்களுக்கான விளக்கங்களைக் கூறுவதில் சிறப்பிடம் பெற்றன. சமயமுன்னேற்றம் கருதி 1915இல் வெளியிடப்பட்ட பாலபாஸ்கரன் என்ற பத்திரிகையில் சைவதத்துவங்கள் சிறப்பிடம் பெற்றன. 1924இல் வெளிவந்த சைவசித்தாந்தபானு என்ற பத்திரிகை சமயக்கருத்துக்கள்,புராணக்கதைகள்,மற்றும் சமயசீர்திருத்தக்கருத்துக்களையும் முன்வைத்தது.

கலிகால தீபம் என்ற பத்திரிகை அரசியல்,சமூக விடயங்களுடன் சைவமுன்னேற்றத்தினையும் முக்கிய நோக்காகக் கொண்டு 1927இல் வெளிவந்தது. பஞ்சசக்தி என்னும் பத்திரிகையும் இந்துசமய வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வெளிவந்த பத்திரிகையாகும். இவ்வாறு வெளிவந்த பத்திரிகைகள்

யாவற்றிலும் இந்துசமயம் சார்பான கருத்துக்கள் வெளிவந்தன. இந்துசமயக்கருத்துக்களை பரப்புரை செய்து இந்துசமய வளர்ச்சியை ஏற்படுத்தியதில் இப்பத்திரிகைகள் தம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ளன.

அடுத்து ஈழத்து இந்துசமய வளர்ச்சியில் இந்துசஞ்சிகைகளினது பங்கும் அளப்பரியதாகும். அதாவது 18,19 ஆம் நூற்றாண்டுச் சூழலில் கிறிஸ்தவமயமாக்கலின் கீழ் தாழ்வுற்றிருந்த இந்துசமயத்தை கட்டியெழுப்பி மறுமலர்ச்சியை ஏற்படுத்த எவ்வாறு இந்துப்பத்திரிகைகள் தோற்றம் பெற்று வளர்ச்சி கண்டதோ அதனோடு ஒன்றித்தவாறு இந்துச்சஞ்சிகைகளும் தோற்றம் பெற்று வளர்ச்சி கண்டு இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு துணை புரிந்தது.

அந்தவகையில் ஈழத்தில் தோற்றம் பெற்ற இந்துச்சஞ்சிகைகள் யாவும் முழுக்க முழுக்க இந்துசமயம் சார்பான கருத்துக்களையே தாங்கி வெளிவந்துள்ளது. இந்துசமயக்கருத்துக்களில் தெளிவற்று கிறிஸ்தவ மதத்தைத்தழுவிய மக்களுக்கு சமயக்கருத்துக்களை நன்கு விளக்கும் முகமாக தோற்றம் பெற்ற சஞ்சிகைகள் கடவுள் உண்மை, திருத்தலங்களின் பெருமை, சைவப்பெரியார்களின் சமயப்பணிகள், புராண,இதிகாசச்செய்திகள், சிவசிந்தனை, தத்துவவிளக்கம், முதலான சைவசமயத்தின் உண்மையான விடயங்களை மக்களிடம் இச்சஞ்சிகைகள் கொண்டு சேர்த்தன.

அந்த அடிப்படையில் இளங்கதிர் என்ற சஞ்சிகை இந்துசமய வளர்ச்சிக்கு ஏதுவான கருத்துக்களை தாங்கி வெளிவந்துள்ளது. சிவசின்னப்பெருமை, பஞ்சபுராணம், இறைஉண்மை, தலங்களின் சிறப்புக்கள் போன்ற சமயம்சார் தலைப்பிலமைந்த சிறு கட்டுரைகள் இதில் வெளிவந்து இந்துசமய வளர்ச்சிக்கு உதவின என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து ஆறுமுகநாவலரின் சைவப்பணிகளின் ஊற்று என்ற சஞ்சிகையானது ஆறுமுகநாவலருடைய சைவப்பணிகளை கட்டுரைகளாக தாங்கி வெளிவந்தது. அடுத்து இந்து இளைஞன் என்னும் பெயரில் வெளிவந்த சஞ்சிகையும் இந்துசமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி நின்றது. சமயமும் சமூகமும், சமய விழுமியங்கள், இந்துவாகவாழ்வோம், இதுதான் இந்துசமயம் முதலான இந்துமக்களுக்கு ஏதுவான சமயக்கருத்துக்களை இச்சஞ்சிகை வெளியிட்டது.

அடுத்து இந்துசமய வளர்ச்சிக்கு பங்களிப்புச்செய்த மற்றுமொரு சஞ்சிகை சைவநீதியாகும். இந்த சஞ்சிகையில் மேன்மை கொள்சைவநீதி, சமயம் வளர்த்த நாவலர், இந்துமதப்புனருத்தாரணம் முதலிய தலைப்பிலமைந்த சைவசமயக்கட்டுரைகள் சிறுசிறு பகுதிகளாக வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்து சைவ மறுமலர்ச்சி என்ற சஞ்சிகையானது, 19ஆம் நூற்றாண்டில் இந்துசமயத்தின் மீதான அந்நியரின் ஆக்கிரமிப்பு, சைவசமயத்தைக்காக்க தோற்றம் பெற்ற சைவப்பெரியார்கள், இந்தமத மறுமலர்ச்சிக்காக அவர்கள் முன்னெடுத்த பணிகள் ஆகியவற்றை கூறுகின்ற இந்துசமயம்சார் சஞ்சிகையாக இது வெளிவந்தது.

அடுத்து ப.ஆறுமுகம் என்பவரால் நாவலர் பார்வையில் சைவப்பரிபாலன சபை என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது. இது யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடாக அமைந்தது. இதில் சைவப்பரிபாலன சபையின் வரலாறு, அது முன்னெடுக்கும் பணிகள், சமயக்கருத்துக்கள் முதலான இந்துசமயம்சார் விடயங்களை தன்னகத்தே கொண்டு வெளிவந்த சஞ்சிகையாக இது விளங்கியது. அடுத்து மணிவிழா மலர் என்ற சஞ்சிகையும் இந்துசமயத்திற்கு சார்பான சில கட்டுரைகளை கொண்டு வெளிவந்தது.

இவை தவிர இன்றும் ஈழத்தில் பெரும்பாலான இந்துசமயம்சார் சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. அச்சஞ்சிகைகளில் பெரும்பாலான சைவக்கருத்துக்கள் உள்ளடங்கியுள்ளன. அந்த அடிப்படையில் ஞானச்சுடர் என்ற இந்துச்சஞ்சிகை இன்றும் சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை,ஆச்சிரம பண்பாட்டுப்பேரவையால் வெளியிடப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்துஒளி என்னும் சஞ்சிகை அகில இலங்கை இந்துமாமன்றத்தாலும், சிவதொண்டன் என்னும் இந்துசஞ்சிகை யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தினாலும் ஸ்ரீராம கிருஸ்ணர் விஜயம், அறநெறி அமுதம் போன்றன இராமகிருஸ்ண மிஷனாலும் கோபுரம், பண்பாடு போன்றவை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினாலும் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவைதவிர ஆன்மீகம், சத்தியஞானம், இந்துக்கலாசாரம், ஞானபூமி, இந்துவழி, சக்கரம், காயத்திரி, தர்மசக்கரம் முதலான இந்துசமயம்சார் சஞ்சிகைகளும் இன்றும் பல்வேறுபட்ட சமயக்கருத்துக்களைத் தாங்கி வெளிவந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக இச்சஞ்சிகைகளில் வெளிவரும் சமயக்கருத்துக்கள் பற்றிப்பார்த்தால் ஸ்ரீராம கிருஸ்ண விஜயத்தில் நவராத்திரி சிறப்புக்கட்டுரைகள், சமயப்பெரியார்கள் முதலான இதழுக்கு இதழ் வெவ்வேறான இந்துசமயம்சார் கருத்துக்களை தாங்கி வெளிவந்து கொண்டிருக்கின்றன.

சிவதொண்டன் என்னும் இந்துசஞ்சிகையில் விநாயகர், முருகன், சிவன் போன்ற கடவுளர்கள் பற்றியும், லிங்கோற்பவர், நடராஜர் போன்ற சிவமூர்த்தங்கள் பற்றியும் சிவராத்திரி, நவராத்திரி, போன்ற விரதங்கள் பற்றியும், சிவசின்னப்பெருமை, சைவசமய இலக்கியங்கள் பற்றியதுமான இந்துசமயம்சார் விடயங்களையே முழுக்க முழுக்க உள்ளடக்கி வெளிவந்து கொண்டிருக்கின்றது.

அடுத்து இந்துஒளி, பண்பாடு, கோபுரம், ஆயதனம் முதலான சஞ்சிகைகளில் பஞ்சபுராணங்கள், தீட்சை, சைவத்திற்கு தொண்டாற்றிய சைவப்பெரியார்கள், விரதமகிமைகள், இந்துக்கோயில்கள், இந்துதத்துவங்கள், வாழ்வியல் சிந்தனைகள் எனப்பலவாறான இந்துசமயக்கருத்துக்கள் வெளிவந்து அவை மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளன.

எனவே இந்துசமயம்சார் சஞ்சிகைகள்,பத்திரிகைகள் 19 ஆம் நூற்றாண்டுச்சூழலில் தோற்றம் பெற்று இந்துசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி அவை இன்றும் வெளிவரும் அளவிற்கு ஊடகத்துறையில் பாரிய வளர்ச்சி பெற்றுள்ளது என்பது எவராலும்

மறுக்கமுடியாது. பொதுவாக தொகுத்து நோக்குமிடத்து ஆரம்பகாலத்தில் தோற்றம் பெற்ற இந்துசசமயம்சார் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பன ஊடகத்துறையில் இந்துசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் அளப்பரிய பங்காற்றிஅ வை மறைந்து விடாமல் அதன் நினைவுகளாக இன்றும் ஈழத்தில் சில இந்துசமயம்சார் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவருகின்றமையானது ஊடகத்துறையில் அவை பெறுகின்ற வளர்ச்சிப்படியினை எடுத்துக்காட்டுகின்றது என்பது மறுப்பதற்கில்லை.

**உசாத்துணை நூல்கள்.**


1. சிவகுருநாதன்.இ., (1993), இலங்கையில் தமிழ்ப்புதினப் பத்திரிகையின் வளர்ச்சி, குமரன் புத்தக இல்லம்.
2. சிவானந்தசர்மா.ப., (1985), இலங்கையில் - தமிழ்ப்புதினப் பத்திரிகைகள்-சஞ்சிகைகள், சர்வசக்தி குருகலம்,கிளிநொச்சி
3. ஈசுவரப்பிள்ளை.த., (2006), பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கிய போக்குகளும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
4. கந்த சத்தியதாசன்.செ., (2010), சைவக்கல்வி பாரம்பரியமும் சைவப்புலவர்களின் பங்களிப்பும், மணிமேகலைப்பிரசுரம்,சென்னை
5. முகுந்தன்.ச., (2007), ‘‘பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் நிகழ்ந்த இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சிப் போக்கில் இந்து ஊடகத்துறையின் வகிபங்கு’’, **இந்துஒளி**, அகில இலங்கை இந்துமாமன்றம்.
6. செல்வகுமாரி.சி., (2012), ‘‘இந்துமதம் சார்பான ஈழத்துப்பத்திரிகைகள்’’, **பிரித்தானிய ஆட்சியும் நவீனமயமாக்கமும்**, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
7. யோகராசா.செ., (2002), ‘‘ஈழத்தில் ஊடக வளர்ச்சி – ஒரு நோக்கு, **பண்பாடு**, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
8. சாந்தி கேசவன்., (1997), இந்துநாகரிகம், ராஜாஸ் புத்தக நிலையம்,மட்டக்களப்பு